# சர்வதேச மன்னிப்புசபை இலங்கை வர அனுமதி

(கொழும்பு)
சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை வந்து விசாரணை செய்து அறிக்கை வெளியிட இலங்கை அரசு அனுமதியளித்துள்ளது.
அரசின் இம்முடிவை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் திரு. டி. பி விஜய
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 88 | வைகாசி 4 | துல்ஹஃதா 3 | இதழ்: 97

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 18-5-1991

## ரஞ்சனின் இடத்தில் சிறிசேன

(கோழும்பு)
முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் மரணத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பாராளுமன்ற வெற்றிடத்துக்கு சப் பிரகமுவ மாகாணசபை
(4ம் பக்கம் பார்க்க)

## வாகரையில் இளம் பெண் வெட்டிக் கொலை

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு வாகரை பகுதியில் பூரியன்காடு என்னுமிடத்தில் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் யுவதி ஒருவர் மானபங்கப் படுத்தப்பட்டபின் கொடூரமான முறையில் வெட்டிக்
[4ம் பக்கம் பார்க்க]

# தெற்கில் மீண்டும் இளைஞர்கள் கொலை

# குண்டு துளைத்த 10 சடலங்கள்

# மொறட்டுவை ஆற்றில் மீட்பு!

(கொழும்பு)
தென்பகுதியில் மீண்டும் இளைஞர்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுவருவது அம்பலத்துக்கு வந்துள்ளது. கொழும்பு மாநகரை அண்டியுள்ள பகுதியான மொறட்டுவையிலுள்ள ஆறு ஒன்றில் பத்து இளைஞர்களின் குண்டு துளைக்கப்பட்ட சடலங்கள் நேற்று கண்டெடுக்கப்பட்டன.

நேற்று கண்டெடுக்கப்பட்ட பத்து சடலங்களில் ஒன்பது சடலங்கள் இளம் ஆண்களுடையதெனவும் மற்ற ஒரு சடலம் இளம் பெண்ணினுடையதெனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவர்கள் அனைவரும் சிங்களவர்கள் எனவும் கூறப்படுகிறது. அரசு எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த ஜே. வி. பி. இயக்க உறுப்பினர்கள் இவர்கள் என்றும் அரசு ஆதரவுடன் இயங்கும் "பச்சை புலிகளே" இவர்களை கொலை செய்து ஆற்றில் வீசியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (பூ)

## மனித உரிமைகள் பேணப்படுவதை பொறுத்தே இலங்கைக்கு நிதி உதவிகள்

[லண்டன்]
மனித உரிமைகளை எந்த அளவுக்கு இலங்கை மதிக்கிறது என்பதைப் பொறுத்தே இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படுமென்று பல சர்வதேச நாடுகள் தெரிவித்துள்ளன.
ஐரோப்பிய பொருளாதார சமுதாய அமைப்பு, மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுவைச் சேர்ந்த நாடுகள் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அண்மைக் காலத்தில் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருந்தன.
இலங்கைக்கான உதவிகள்
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் தேர்தலை புறக்கணித்தனராம் வதந்தியால் கொழும்பில் பதற்றம்!

[கொழும்பு]
அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலை கொழும்பிலுள்ள தமிழர்கள் முற்றாக புறக்கணித்ததாக எழுந்த வதந்தியால் அங்கு பதற்றம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.
சில விஷமிகளால் பரப்பி விடப்பட்ட இந்த வதந்தியால் பதற்றம் ஏற்பட்டதாகவும் உடனடியாக பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டு பின் நிலைமை சமாளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
[4-ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவிலிருந்து துப்பாக்கி பிரயோகம்

(வவுனியா)
ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து குடியிருப்புப் பகுதியான இயக்கச்சி பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் வீச்சுத் தாக்குதலும் இடம் பெற்றுள்ளன.
இத்தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை 1 மணியிலிருந்து பகல் 10 மணிவரை மேற்கொள்ளப்பட்டன. சேத விபரம்பற்றி தெரியவரவில்லை

## வடக்குகிழக்கு பகுதிகளுக்கு அவுஸ்திரேலியா நிதிஉதவி

(கொழும்பு)
வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கென அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம், புனர் வாழ்வு, புனர்நிர்மாண சமூக
(4ம் பக்கம் பார்க்க)

## 20ம் தேதி முதல் 37-ம்கட்ட உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)
இம்மாதம் 31ந் திகதிக்குள் 37ம் கட்ட சகலருக்குமான இலவச உலர்உணவுப்பொருட்களை ப. நோ. கூ. சங்கங்கள் பொதுமக்களுக்கு வழங்கி முடித்துவிட வேண்டுமென்று யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் தெரிவித்தார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா காங்கிரஸே வெற்றி பெறும் இந்தியபத்திரிகைகள்கணிப்பு

(புதுடில்லி)
இந்திய தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையுமென்பது குறித்து இந்திய பிரபல சஞ்சிகைகள் கருத்துக்கணிப் பெடுப்பு வெளியிட்டுள்ளன. இவ்வாக்கெடுப்பு விபரத்தின்படி இந்திரா காங்கிரஸுக்கே வாய்ப்பு அதிகம் என வும் அவை குறிப்பிட்டுள்ளன. விபரம் வருமாறு:

| | காங்கிரஸ் (ஐ) | பாரதீய ஜனதா + சிவசேனா | தேசிய முன்னணி |
|---|---|---|---|
| 'சண்டே' | 310 | 85 | 30 |
| இந்தியா டுடே | 233 | 155 | 105 |
| புரண்ட் லைன் | 224 | 140 | 115 |

## ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடபகுதி கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு கஷ்டப்பிரதேசத்தில் கடமை புரியும் ஊக்குவிப்புப் பணத்தை கொடுப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து நிதி பெற்றுத்
(4-ம் பக்கம் பார்க்க)

## பாணுக்கான தட்டுப்பாட்டை நீக்க மா கொண்டுவர அனுமதி தேவை!

(கொழும்பு)
"கொழும்பிலிருந்து கோதுமை மாவை இங்கு கொண்டுவருவதற்கு எமக்கு அனுமதி வழங்கினால் யாழ். மாவட்டத்தில்நிலவும் பாணுக்கான தட்டுப்பாட்டை உடனடியாக நாம் தீர்த்துவைப்போம்."
இவ்வாறு யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார். யாழ் மாவட்டத்தில் தற்போது நிலவும் பாண் தட்டுப்பாடு குறித்து அவரிடம் வினவியபோது அவர் மேலும் கூறியதாவது:
(3ம் பக்கம் பார்க்க)

## வல்வை நோக்கி 'ஷெல்' தாக்குதல்

(வடமராட்சி)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு வல்வைப் பகுதியைநோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்
(4-ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

### தரன் படப் பிடிப்பாளர்

கலர்-கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புனொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள். தரன் படப் பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 4673)

### கமுகஞ்சிலாகை

தரமான கமுகஞ்சிலாகைகள் மலிவாக விற்பனையாகின்றன. ஜனு பிக்சர்பலஸ், பஸ் நிலையம் முன்பாக சுன்னாகம். (எ-1309)

### PERSONAL CLASSES
### கணிதம் MATHS

G. C. E. (O/L) 90, 91 மற்றும் ஆண்டுகள் 6, 7, 8, 9, 10ம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் விபரங்களுக்கு: கந்தையா பரராஜசேகரன், 8B, Flechers Lane, Chundikuli. (கி-4746)

### இடமாற்றம்

துர்க்கா மங்கல சேவைநிலையம் இலக்கம் 115, முதலாம் குறுக்கு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. செவ்வாய் பாவம் கிரகதோஷ நிவர்த்தி. இலவச சாந்தி ஆலோசனைகள் வழங்கப்பட்டு திருமணமும் நிறைவேற்றி வைக்கப்படும். அச்சொட்டாக சாதகபலனையறியவும் கணிப்பதற்கும் தொடர்பு கொள்ளவும், S. பூங்கராஜ் (சோதிடர்). (கி-4745)


## கடை உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தொட்டிலடி 33ம் இலக்கக் கிளை உடைத்து சில பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மல்லி, சீரகம் உட்பட 3000 ரூபாவிற்கு மேற்பட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. (56)

## தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி விண்ணப்பம்

(உடுவில்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் இவ்வாண்டு நடாத்தப்பட உள்ள தொழில் நுட்பத்தராதரப்பத்திர, தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களும், 1991ம் ஆண்டுக்கான விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்களுக்குமான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மே மாதம் 31ம் திகதியாகும்.

விண்ணப்பப்படிவங்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும் எனத்தெரிய வருகின்றது. (109)

## தீவுப்பகுதி உலர்உணவு மக்களுக்கு நிவாரணம்

(மானிப்பாய்)

இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களுக்கு 38வது கட்ட உலர் உணவு நிவாரண பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கையில் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை தற்போது வழங்கப்பட்டு வரும் 37வது கட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கி முடியும் நிலையில் உள்ளதாக தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (71)

## தொலைக்கல்வி இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை இன்று 18ம் திகதியும், நாளை 19ம் திகதியும் அடுத்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சை பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலியில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்தில் பரீட்சார்த்திகள் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

## கைத்தொழில் நிலையங்கள்

(பளை)

பளைப் பகுதியின் பல கிராமங்களில் கைத்தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

தும்புக்கட்டு, விளக்குமாறு கிடுகு பின்னுதல், பன்ன வேலைகள் போன்ற கிராமிய கைத்தொழில்களை ஊக்குவிக்கவே இந் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருவதாக பளை வட்டாரப் பொறுப்பாளர் பதுமன் தெரிவித்தார்.

## பதில் கிராமசேவை அலுவலர்கள்

(சித்தன்கேணி)

சுழிபுரம் கிழக்கு கிராம சேவை அலுவலர் வி. ரி. கதிர்காமநாதன் சுழிபுரம் மத்தி கிராமசேவை அலுவலர் பிரிவிற்கும், சுழிபுரம் மேற்கு கிராமசேவை அலுவலர் திரு. என். குமரகுருநாதன் மூளாய் கிராமசேவை அலுவலர் பிரிவிற்கும். தொல்புரம் மேற்கு கிராமசேவை அலுவலர் திரு. ஆர். ஸ்ரீரஞ்சன் தொல்புரம் கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவிற்கும் நிரந்தரமான கிராமசேவை அலுவலர்கள் இல்லாமையில் பதில் கடமை யாற்றுவதற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். [137]

## மதிய உணவு முத்திரை

(அத்தங்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான மதியபோசன உணவுமுத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தினால் வழங்கப்படுகின்றன.

பாடசாலை அதிபர்கள் அலுவலகத்துக்கு வந்து மாணவர்களின் மதியபோசன உணவு முத்திரைகளைப் பெற்றுச் செல்லுமாறு உதவி அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (137)


# VACANCY

Applications are invited from the suitable candidates for the post of Community Development Trainer. This training programme for about six selected trainees includes the following areas. The medium of instruction will be in Tamil

(a) Dairy Development
(b) Milk food preparation
(c) Soil testing
(d) Co-operative management
(e) Manure and Fertilizer Storage
(f) Seedling preparation
(g) Community animation, basic skills in community health and Community Development

The above programme is for six (6) months. The candidates must have experience and relevant qualifications in the above fields.

He should be able to reside at the training site for the six months (Quarters will be provided)

Very attractive salary will be paid according to qualifications and experience. Not less than Rs. 20,000/- per month. Apply before 31st of May 1991, to

**The Director of Projects,**
**Jaffna Diocese of the Church of South India,**
DIOCESAN OFFICE; VADDUKODDAI.

(A 4721)


## இளம்பெண் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

கணவருடன் நீண்ட காலமாக மனஸ்தாபப்பட்டிருந்த இளம் குடும்பப்பெண் ஒருவர் நச்சுக்காய் சாப்பிட்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

யாழ். கொட்டடி சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த திருமதி சரோஜினி தேவி பாலசுப்பிரமணியம் [31 வயது] என்னும் பெண்ணே இம்மரணத்தை தழுவிக்கொண்டவராவர். [56]

## புள்ளிவிபர கைநூல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட புள்ளிவிபரக் கைநூல் இம்மாதக் கடைசி வாரத்தில் வெளிவரவிருக்கிறது.

யாழ். மாவட்ட புள்ளிவிபர உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட மாவட்டத்திற்கான 1990ம் ஆண்டுக்கான புள்ளிவிபரக் கைநூல் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றது. (153)

## சம்பளம் தாமதம்

(மாங்குளம்)

மன்னார் பகுதியில் பயிலுநர் ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தைப்பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாக கவலை கொள்கின்றனர். (150)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

தேவரையாளி இந்துக்கல்லூரி தாபகரும் சைவப்பெரியாருமாகிய சூரன் ஆசாரியாரின் குருபூசை அண்மையில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் ஆசாரியார் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. இ. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி உபஅதிபர் சி. திரவியம், டாக்டர் சி. மாசிலாமணி ஆகியோர் உரையாற்றினார்கள்.

கல்லூரியில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் விழாவில் கலந்துகொண்டவர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## வீட்டுதோட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சமநலச் சேவைத் திணைக்களத்திலும் கமத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற வீட்டுத்தோட்டப் போட்டியின் பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கமநல சேவை நிலைய மட்டத்தில் முதல் மூன்று இடங்களை தெரிவு செய்வதற்கான பரிசில்களின் முடிவுகள் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

அதைத்தொடர்ந்து மாவட்ட ரீதியான பரிசில்கள் வழங்குவதற்கான பரிசீலனை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (153)

## இராசி பலன்

18-05-1991

சனிக்கிழமை

பஞ்சமி: இரவு 11-23 வரை. புனர்பூசம்: இரவு 10-56 வரை. சித்தயோகம். இராகு காலம்: காலை 8-52 முதல் 10-26 வரை. சுப நேரம்: மாலை 5-16 முதல் 7-14 வரை.

மேடம்: புதிய உறவு, தொழில் மகிழ்ச்சி, குடும்ப உல்லாசம், பணவரவு.

இடபம்: குடும்ப மோதல், தொழில் பிரச்சனை, அந்நிய வாசம், செலவு.

மிதுனம்: மகிழ்ச்சியான சம்பவம், குடும்ப சுகம், இனசன உறவு, கற்பனை மிகுதி.

கடகம்: பயணங்கள் தடை, புத்திரர் பகை, தொழில் முயற்சி தாமதம்.

சிங்கம்: விவேகமற்ற போக்கு, தைரியமின்மை, பணியாளர் சகாயம்.

கன்னி: தொழில் போட்டி, குடும்ப அலைச்சல், சகோதரர் உதவி.

துலாம்: மனஸ்தாபம், இனசன விரோதம், தொழில் முடக்கம், செலவு.

விருச்சிகம்: உடல் உபாதை, அதிகாரிகள் தொல்லை, வீட்டில் துன்பம்.

தனுசு: புதிய முயற்சி, ஆடம்பரச் செலவு, தொழில் லாபம், குடும்ப சுகம்.

மகரம்: அந்தஸ்துக் குறைவு, பகைவர் தொல்லை, ஆலய தரிசனம், மனச் சுமை.

கும்பம்: அதிகாரம், அற்பர் நேசம், திருமண முயற்சி, புத்திரர் மகிழ்ச்சி.

மீனம்: பயணங்களால் அநுகூலம், தொழில் நஷ்டம், குடும்ப முரண்பாடு.

-ஜோஸ்யர்

## இலவச நிவாரணம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன தொழிலாளர்களுக்கு இலவச உலர் உணவு அட்டைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## விஞ்ஞான சங்க ஆரம்பவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்கத்தின் முதாவது தொடக்கவுரை ஜூன் மாதம் 21ந் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

யாழ். விஞ்ஞான சங்கத்தின் தலைவர் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அபிவிருத்தியின் உயர்கல்வி என்ற தலைப்பில் தொடக்கவுரை நிகழ்த்தவுள்ளார்.

யாழ். விஞ்ஞானச்சங்கம் கடந்த மார்ச் மாதம் 1ந் திகதி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [153]

## அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பிற்குத் தற்காலிக அனுமதி கோரும் மாணவர்களுக்குரிய தெரிவுப் பரீட்சை 20-ம் தேதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபேறும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சருமநோய் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

தற்போதைய உஷ்ண கால நிலைமையினால் வலிகாமம் மேற்குப் பகுதியில் சொறி, சிரங்கு போன்ற சரும நோய்கள் அதிகரித்துவருகின்றன. சிலருக்கு பருக்கள், கொப்புளங்கள் ஏற்பட்டிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் இந்த வகை நோயாளர்கள் சிகிச்சை பெற வருவது அதிகரித்துள்ளது. (72)

## முதலுதவி சான்றிதழ்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செஞ் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவிற்கான சர்வதேச சான்றிதழ்கள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. இச்சான்றிதழை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (83)

## புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராகவும், மட்டுவில் கொத்தணி அதிபராகவும் திரு அ. பொ. செல்லையா கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பளை மகாவித்தியாலயத்தின் அதிபராக முன்னர் கடமையாற்றி வந்தவராவர்.

## குடிநீர் தட்டுப்பாடு

(மாங்குளம்)

மன்னாரில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது மன்னார் பட்டினத்திற்கு நாளாந்தம் முப்பது நிமிட நேரம் மாத்திரமே குடிநீர் விநியோகம் இடம் பெறுவதாகவும், இதனால் குடிநீர் தேவை பூர்த்திபடையாததால் மேலும் தண்ணீர் வழங்கும் நேரத்தை அதிகரிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)

## தமிழ்நாடு தேர்தல்களம்

தமிழ்நாடு தேர்தல்தொடர்பாக, அநேகமாக சகல பணிகளும் பூர்த்தியடைந்துவிட்டதாக நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மாநில தேர்தல் அதிகாரி திரு. ரகுபதி தெரிவித்தார்: 234 சட்டப்பேரவை தொகுதியில் 204 தொகுதிகளுக்கும், 39 மக்களவை தொகுதியில் 33 தொகுதிகளுக்கும் வாக்குசீட்டுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஏனைய தொகுதிகளுக்கான வாக்குசீட்டுகள் நாளை அனுப்பிவைக்கப்படும்

### வாக்குப் பெட்டிகள்

சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும், வாக்குப்பெட்டிகளும் அடையாள மையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தெரிவுசெய்யப்பட்டுவிட்டனர். கர்நாடகம், கேரள எல்லைப் பகுதிகளிலுள்ள மது விற்பனை நிலையங்களை தேர்தல் தினத்தன்று பூட்டிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தேர்தல் தினமான 26ம் திகதிமுதல் 28ம் திகதி வரை மின்சாரம் தடைப்படாமல் இருப்பதற்கான ஏற்பாட்டை செய்யுமாறு மின்சாரப்பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பதற்றநிலை காணப்படும் பகுதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க மேலதிக பொலிஸாரை அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நேரம் இம்முறை ஒரு மணித்தியாலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வாக்களிப்பு நேரத்தில் வாக்களிப்பு நிலையத்திற்குள் செல்பவர்கள் அனைவரையும் வாக்களிக்க அனுமதிப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### நள்ளிரவு 12 மணிக்கு

மக்களவைக்கான வாக்குகளும், சட்டப்பேரவைக்கான வாக்குகளும் ஒரே பெட்டியுள் போடப்படுவதனால் அவற்றை தனித்தனியாக பிரித்து எடுக்க நேரம் செல்லுமாதலால், சட்டப்பேரவை வாக்குகள் எண்ண ஆரம்பிக்கும் தினத்தன்று நள்ளிரவு 12 மணிக்குப் பின்னரே முதலாவது தேர்தல்முடிவு வெளியாகக்கூடுமென்று தெரிவிக்கப்படுகிறது

### பிரசார வேலைகள்

வாக்களிப்புக்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னர் சகல பிரசார வேலைகளும் நிறுத்தப்பட்டுவிடும். 24ம் திகதி வெள்ளிமாலை 5-00 மணியுடன் தமிழ்நாட்டில் சகல பிரசார வேலைகளும் முடிவுக்கு வந்துவிடும்.

630 இராணுவ அணி தேர்தல் பாதுகாப்புக்காக மாநிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அணி தமிழ் நாட்டுக்கும் அனுப்பிவைக்கப்படும். பதற்றம் காணப்படும் பகுதிகளில் இந்த அணி பணியாற்றும்.

### பார்வையாளர் குழு

உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில் சுயேச்சை பார்வையாளர் குழு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் பற்றி தேர்தல் ஆணையாளருக்கு தெரிவிக்கும். இந்தக் குழுவில் முன்னாள் நீதிபதிகள் வழக்கறிஞர்கள் இடம்பெற்றுள்ளனர்.

## பாணுக்கான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எமது சங்கத்துக்கு, எந்த ஒரு கூட்டுறவுச் சங்கமும் மா வழங்குவதில்லை. நாம் தனியார்கடைகளிலேயே மாவைப் பெற்று வருகின்றோம். ஒரு மூடை மாவின் கட்டுப்பாட்டுவிலை 1,675 ரூபா. அந்த விலையில் எமக்கு மா கிடைப்பது மிகமிக அரிது. இவை தவிர, சீனி, எண்ணெய், விறகு மற்றும் பொருட்களையும் நாம் கூடுதலான பணம் கொடுத்தே வாங்கிவருகிறோம். இப்படியான நெருக்கடிகளின் மத்தியிலும் நாம் பொதுமக்களுக்கு 350 கிராம் நிறை கொண்ட பாணை 10 ரூபா 50 சதத்திற்கு இயன்றளவு விற்பனை செய்துவருகின்றோம்

பாணுக்கு தேவையான மாவை கொழும்பிலிருந்து எடுத்துவர அனுமதி அளித்தால் போதியளவு பாணை நாம்பொதுமக்களுக்கு வழங்குவோம்.

இது சம்பந்தமாக முன்னாள் யாழ். அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ள போதிலும் இதுவரை சாதகமான பலனெதுவும்கிடைக்கவில்லை என்றார். (வி)

## ★ தடைசெய்யப்பட்ட சீன 'பலஸ்ரிக்' ஏவுகணை பாகிஸ்தானுக்கு விற்பனை

## இந்தியா பெரும் அதிர்ச்சி

(பீக்கிங்)

ஏவுகணைகள் தொடர்பாக சர்வதேச சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட 'பலஸ்ரிக்' ஏவுகணைகளை பாகிஸ்தானுக்கு விற்க சீனா முடிவுசெய்துள்ளது. சீனாவின் இம்முடிவு இந்தியாவுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

200 கி. மீ. தூரத்துக்குக் குறைவாகச் செல்லும் இந்த 'பலஸ்ரிக்' ஏவுகணை சர்வதேச சட்டத்தை மீறவில்லை என சீனா வாதாடி வருகிறது. இந்த ஏவுகணைகள் விரைவில்பாகிஸ்தானுக்கு அனுப்பப்படவுள்ளன.

இதேவேளை அமெரிக்க புலனாய்வு துறையின் அறிக்கையின்படி பாகிஸ்தானின் எந்த பகுதியிலிருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டாலும் அது வடஇந்தியாவிலுள்ள முக்கிய தளங்களைத் தாக்கும் சாத்தியமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஏவுகணைகளை சீனா பாகிஸ்தானுக்கு விற்பனை செய்வது குறித்து இந்தியா அதிர்ச்சியடைந்துள்ளதுடன் இவ் ஏவுகணை சர்வதேச சட்டத்துக்கு முரணானதெனவும் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. [சி]

## பஞ்சாப் மாநிலத்தில் எண்மர் சுட்டுக்கொலை

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஒருவரும், அவரது குடும்பத்திலுள்ள 8 பேரும் அவரது பாதுகாவலர்களும் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் இதுவரை 9 அரசியல்வாதிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர். (பூ)

## வேலணை பி. சபை கொக்குவிலில் இயங்குகிறது

(வேலணை)

ஊர்காவற்றுறையில் தங்கியிருக்கும் படையினரின் நடவடிக்கையால் வேலணைப்பிரதேச சபையின் தலைமைக்காரியாலயம் கொக்குவிலிலுள்ள நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உபகாரியாலயகட்டிடத்தில் இயங்கி வருகின்றது. (75)

## "விடுதலைப்போராட்டத்தில் கலை இலக்கியங்களின் பங்கு மிக முக்கியமானதாகும்"

(யாழ்ப்பாணம்)

"இன்றைய விடுதலைப் போராட்டத்தில், கலை, இலக்கியங்களின் பங்கு மிக முக்கியமாகிவிட்டது" என்று சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்ட அவைப் பொறுப்பாளர் ஜெயா தெரிவித்தார்.

கைதடி நுணாவிலில் நடைபெற்ற கவிஞர் நேகலதாவின் 'இருளினைக்கிழித்து தெருவினில் இறங்கு' கவிதை நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"உரிமைப் போராட்டம் முனைப்படைந்துவரும் இவ்வேளையில் ஆரோக்கியமான இலக்கியங்கள் எம்மவரால் படைக்கப்பட்டு வருகின்றன" என்றும் அவர் தெரிவித்தார்.

கிராம சேவையாளர் க. வாமதேவன் தமது ஆய்வுரையின்போது கூறியதாவது:

"ஒரு காலத்தின் தேவையை அந்தந்தச் சூழ்நிலையைக் கவிதைகள் எடுத்துச் சொல்கின்றன. இந்த வகையில் இன்று இந்த மண்ணில் பிரசவமாகும் கவிதைகள் யாவும் எமது மண்ணின் அவலத்தை எங்கள் போராட்டத்தின் மகிமையை விளக்கிக் கூறுகின்றனவாக அமைந்துள்ளன." என்றார்.

நுணாவில் அ. த. க. பாடசாலை அதிபர் க. இளையதம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கா. சந்திரசேகரம், த. அப்புத்துரை, சி. சண்முகலிங்கம், திருமதி ராஜி சண்முகநாதன், செல்வி தனு கந்தையா, என். வே துரைசிங்கம் ஆகியோர் ஆய்வுரை வழங்கினர்.

## நாகர்கோவிலில் தற்காலிக கொட்டில்களில் 250 குடும்பங்கள் தவிப்பு

(காங்கேசன்துறை)

நாகர்கோவிலில் தற்காலிகக் கொட்டில்களில் வாழும் சுமார் 250 குடும்பங்கள் மிகவும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மயிலிட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் தலைவர் திரு. செ. தனபாலசிங்கம் இவ்விடயம் குறித்து யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திற்கும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளதுடன், இந்த மக்களின் துயர் துடைக்க உடனடியாக ஆவன செய்யவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து மேற்படி அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கடந்த வருடம் ஜூன் மாதம் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையால் மயிலிட்டிக் கிராமத்திலிருந்து வெளியேறிய 150 குடும்பங்கள் நாகர்கோவிலில் செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக் கொடுத்த முகாம்களில் வாழ்கின்றனர். இதைவிடப் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 91 குடும்பங்களும் இங்கு வாழ்கின்றன. உடுத்த உடையுடன், கைக்கு எட்டிய பொருட்களுடன் வெளியேறிய இந்த அகதிகள் மிகவும் கஷ்ட நிலையில் வாழ்கின்றனர்.

12 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட முகாம்களில் முடங்கி வாழும் இவர்களுக்குபின்னர் அதனைவிரிவாக்கித் தருவதாகவும், சமையல் பாத்திரங்கள் தருவதாகவும், கிணறு, மலகூடம் அமைத்துத் தருவதாகவும், உணவுப் பொருட்கள் தருவதாகவும், புதிய முகாம்கள் அமைத்துத் தருவதாகவும் பல்வேறு வாக்குறுதிகளை அளித்த செஞ்சிலுவைச் சங்கத்தினர், இன்றுவரை அவற்றை நிறைவேற்றவில்லை.

இதனால் மேற்படி மக்களின் வாழ்க்கை மிகவும் கஷ்டநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே இது குறித்து உடனடியாக ஆவன செய்யவேண்டும்". (86)

## இளைப்பாறியோர் ஓய்வூதிய பணிக்கொடை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் கடந்த டிசெம்பரில் சுயவிருப்பத்தின் கீழ் அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களின் ஓய்வூதிய பணிக்கொடை சம்பந்தமான கடிதங்கள் தற்போது யாழ். செயலக ஓய்வூதியக்கிளைக்கு வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதிய பணிக்கொடை கடித பிரதி இளைப்பாறியவரின் விலாசத்திற்கு கிடைத்ததும் உடனடியாக யாழ். செயலக ஓய்வூதியக்கிளையுடன் தொடர்பு கொண்டு தங்கள் ஓய்வூதியத்தை தாமதம் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. [153]

## கிரிக்கெட் மேஜர்டயஸ் கிண்ணம் நொதேண் வசம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற மேஜர் டயஸ் கந்தசாமி வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நொதேண் பச்சை அணி சாம்பியனாகியது.

7 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் 40 கழகங்கள் பங்குபற்றின. இறுதிப்போட்டியில் சென்றலைட்ஸ் அணியும், நொதேண் பச்சை அணியும் பங்குபற்றின.

சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 9 ஓவரில் சகலவிக்கெட்டுகளையும்இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. நொதேண் பச்சை அணி 8 . 3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 42 ஓட்டங்களைப் பெற்றது.

நொதேண் பச்சை அணித் தலைவர் தி. பரிகித்து சிறந்த ஆட்டக்காரராகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும், ஏ.எப். மரியதாஸ் சிறந்த துடுப்பாட்டக்காரராகவும் சென்றலைட்ஸ் வீரர் எஸ். அன்றூ சிறந்த பந்துதடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (கி)

## உதைபந்தாட்டம்: நொக்கவுட் போட்டி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

'யாழ். உதைபந்தாட்ட லீக்' விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி நேற்று முதல் ஆரம்பமானது.

மேற்படி நொக்கவுட்போட்டியில் மொத்தம் 12 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. அவற்றின் விபரம் வருமாறு:-

கிறீன்பீல்ட், வைக்கிங்ஸ், சென்.றேகிஸ், சென். அன்ரனிஸ், சென். நீக்கிலஸ் பாடும்மீன், யுத்காரிமல், பொற்பதி, அரியாலை, கலைவாணி, யாழ். பல்கலைக்கழகம், சென்மேரிஸ் ஆகிய விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இப்போட்டிகள் அனைத்தும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது. (வி)

# ஆசிரிய சேவைத்திட்டத்தினால்

## 1,80,000 ஆசிரியர்கள் பயன் பெறுவ !

(யாழ்ப்பாணம்)

"கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் ஆசிரிய சேவைத் திட்டத்தினால் இலங்கையிலுள்ள ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ஆசிரியர்கள் பயனடைய இருக்கிறார்கள்."

இவ்வாறு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆசிரியர் சேவைத்திட்டம்பற்றி தகவல் வெளியிடுகையில் யாழ். கல்வி அதிகாரி திரு.ஏ. தங்கராசா 'ஈழநாடு'வுக்கு தெரிவிக்கையில் கூறினார்.

மேலும் அத்திட்டத்தைப் பற்றி விபரிக்கையில்; இத்திட்டத்தின்மூலம் ஆசிரியர்களின் திறமைகள் கணிக்கப்பட்டு அவர்கள் கூடிய சம்பளம்பெறுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

திறமைசாலிகள் அதிபர்கள் சேவைக்கோ அன்றேல் கல்வி நிர்வாக சேவைக்கோ போவதைத் தடுத்துநிறுத்தி ஆசிரிய சேவையை மேம்படுத்த இத்திட்டம் வழிசெய்கிறது.

ஆசிரிய சேவை 5 தரங்களாக பிரிக்கப்பட்டு 5ம் தரத்தில் உதவி ஆசிரியர்களை புதிதாக நியமனம் செய்ய வகை ஏற்படுத்துகிறது.

5ம் தரத்தில் (உதவி ஆசிரிகள்) 4ம் தரத்துக்கு பதவி உயர்வு பெறுவதற்கு 10 புள்ளிகள் பெறவேண்டும்.

விசேட பட்டதாரிக்கு 6 புள்ளிகள், பொதுப் பட்டதாரிக்கு 5 புள்ளிகள், ஆசிரிய பயிற்சி தராதரம் பெற்றவர்களுக்கு 3 புள்ளிகள், கல்வி டிப்ளோமாவுக்கு (பட்டத்தின் பின் கிடைக்கும் கல்வி) 2 புள்ளிகள், ஒவ்வொரு வருடச் சேவைக்கும் ஒரு புள்ளிகள் வீதம் புள்ளிகள் கணக்கிடப்படும்.

நான்காம் தரத்திலிருந்து மூன்றும் தரத்துக்கு (ஆசிரியர் தரம்) பதவியுயர்வதற்கு பத்து வருடம் சேவை செய்யவேண்டும். இச்சேவைக்காலம் மேலதிக கல்வித் தராதரம் நடைகான பரீட்சை சித்தியடைதல் ஆகியவைகளைக் கொண்டு குறைக்கப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மூன்றும் தரத்திலிருந்து இரண்டாம் தரத்துக்கு (சிரேஷ்ட ஆசிரியர் தரம்) போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்; தெரிவுசெய்யப்படுபவர்கள் விசேடபதவி தரம் II, விசேட பதவி தரம் I, இரண்டில் ஒன்றில் நியமிக்கப்படுவர்.

மேலதிக கல்வித் தகைமைகளுக்கு முன்னுரிமை வழங்கல் அனைவும் பாசிக்க தரத்துக்குக் கூடிய மதிப்பளித்தல் ஆகியன இத்திட்டத்தின் உயரிய நோக்கங்களாகும்.

2000 ஆம் ஆண்டில் ஆசிரியர் தொழிலுக்குப் பட்டதாரிகள் மாத்திரமே சேர்க்கப்படுவர். இப்போது சேவையில் உள்ளவர்கள் இளைப்பாறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

இந்தப் புதிய திட்டத்துக்கு ஏற்றவகையில் புதிய சம்பளத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றார். (152)

## ஷெல் தாக்குதலில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பேயாடிக்கூழாங்குளம்பகுதியில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் நொச்சிமோட்டை நோக்கிக் கடும் ஷெல் தாக்குதலை நடாத்தினர்.

அப்பகுதியில் நின்றிருந்த பொதுமக்களை நோக்கி நிகழ்த்தப்பட்ட இச் ஷெல் தாக்குதலில் வவுனியா மாமடு 1-ம் யூனிற்றைச் சேர்ந்த கனகசபை செல்வராசா (40-வயது) என்பவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். [56]

### தமிழர் தேர்தலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைபடுத்த பல கட்சிகளும் வெளியிட்ட விளக்க அறிக்கைகள்மூலம் ஓர்தெளிவு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### ரஞ்சனின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் திரு.ஏ.ஈ.டி. சிரிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

காலஞ்சென்ற ரஞ்சன் விஜேரத்ன தெரணியாகல ஐ.தே. கட்சி அமைப்பாளராக இருந்தவேளை சிரிசேன இப்பகுதியின் பிரதி அமைப்பாளராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

### 20 தேதி முதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் மேற்படி விநியோகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது. (153-வி)

### வல்வை நோக்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டது.

வல்வை திருவில் மாடந்தைப்பிள்ளையார் கோவிலடி, எள்ளங்குளம், வல்வெட்டி போன்ற இடங்களில் இந்த ஷெல்கள் வீழ்ந்து வெடித்தாலும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. (51)

### ஊக்குவிப்பு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தாருங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கொழும்பு கூட்டுறவு ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அந்த ஊக்குவிப்புப் பணத்தை வழங்குமாறு அறிவித்திருந்தும் யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி வசதி போதியதாக இல்லாததினால் கொடுக்கவில்லை இதனால் அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெற்று, ஊழியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்" என்றும்அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (152)

### வடக்கு - கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நலத்துறை அமைச்சிடப் 3 லட்சத்து 25 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்களுக்கான காசோலையை வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் அவசர புனர்வாழ்வுத்திட்டத்தின் ஒரு பகுதியாக இது வழங்கப்படுகிறது.

விவசாய தேவைகளுக்கான நீர் இறைக்கும் பம்புகளையும் படகுகளுக்கான இயந்திரங்களையும் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கென கொள்வனவு செய்வதற்கு இந்நிதி பயன்படுத்தப்படும்.

இதற்கு முன்னரும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வாவியில் இறால் பிடிப்பதற்காக 3200 மீன் பிடி வலைகளையும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் இந்நிதியின் கீழ் வழங்கியிருந்தது.

இந்த புனர்நிர்மாண உதவி திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா சுமார் 30லட்சம் அவுஸ்திரேலிய டொலர்களுக்கும் அதிகமான தொகையை இன்னும் வழங்க இருக்கிறது. (பூ)

### வாகரையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 24வயதுடைய பெண்ணே இக்கதிக்குள்ளானார்.

இப்பகுதியில் இளம்பெண்கள் கைதுசெய்யப்படுவதும் பின் இவ்வாறான நிலைக்குள்ளாக்கப்படுவதும் வழமையாகி விட்டது. (வி)

### சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துங்க வெளியிட்டார்.

மன்னிப்புசபை இலங்கையை 1983ல் இருந்தே அனுமதிமறுக்கப்பட்டுவந்ததும், இச்சபை ஓர் பயங்கரவாதஅமைப்பென முன்னாள் பாதுகாப்புராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரத்ன 1989ம் ஆண்டில் குற்றம்சாட்டியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்கள் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் எந்தப்பகுதிக்கும் சென்று விசாரணை நடாத்த அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

1987ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டு வரை தென் பகுதியில் கொல்லப்பட்டும், காணமல்போன சுமார் ஒரு லட்சம் பேர் பற்றிய முழு விபரங்களும், 1983ம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு - கிழக்கு பகுதியில் கொல்லப் பட்டும், காணமல் போன சுமார் 25,000 திற்கும் மேற்பட்டோரது முழுவிபரங்களும் மன்னிப்பு சபையிடம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

★ சாவகச்சேரியில்

குளிர்பானங்களையும்,
சிற்றுண்டி வகைகளையும்
பெற்றுக்கொள்ள
நவீன வசதிகளுடன் கூடிய
ஒரே ஸ்தாபனம்

"பூம்பொய்கை"

கண்டி வீதி, சாவகச்சேரி.

(எ-1310)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/166508/31.

## மணலாறு, வன்னிப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு, வன்னிப் பகுதிகளில் அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த 1200 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உணவு விநியோகம் செய்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலிருந்து வெளியேறி வன்னிக்குளம், மல்லாவி, துணுக்காய், மாங்குளம், முருகண்டி ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கும், மணலாறு பகுதிகளில் இருந்து வெளியேற முடியாத நிலையிலிருந்து மிகவும் துன்பப்பட்டு வரும் மக்களுக்குமே புனர்வாழ்வுக்கழகம் பெருமளவு உணவு விநியோகத்தை மேற்கொண்டது.

மேற்படி பகுதிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 7,100 கிலோ அரிசி 2 000 கிலோ மா, 1100 கிலோ சீனி, 1600 பைக்கெட் பால்மா, 300 கிலோ கருவாடு, 500 கிலோ பயறு, 50 கிலோ தேயிலை, 50கிலோ மிளகாய் 300கிலோ சோயா அவரை ஆகியவற்றை வழங்கியது. (வி)

## பொன்னாலை நோக்கி ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலைச் சந்தியிலிருந்து நேற்றுமுன்தினமிரவு பொன்னாலையை நோக்கி ஷெல், கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடற்பகுதியிலிருந்து கடும் பீரங்கித் தாக்குதல்களும் நடாத்தப்பட்டது. எனினும் பீரங்கிக் குண்டுகள் எங்கு வீழ்ந்தன என்பது பற்றி தெரியவில்லை.

இரவு 9-45 மணியிலிருந்து சுமார் 10 30 மணிவரை இத் தாக்குதல்கள் கடுமையாக இருந்தன. (சி)

### மனித உரிமைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும்போது இலங்கையில் மனிதவுரிமைகள் பற்றித் தீவிர கவனம் செலுத்தப்படுமெனவும் இந்த அமைப்புக்கள் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளன.

## பதவி உயர்வு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான பதவி உயர்வு பரீட்சை இம்முறை முதன் முறையாக யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கிறது. (153)

## மரண அறிவித்தல்

### லில்லி இராசம்மா கணபதிப்பிள்ளை

லில்லி இராசம்மா கணபதிப்பிள்ளை 17-05-91 ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. C. C கணபதிப்பிள்ளையின் [யாழ்ப்பாணக் கல்லூரி பிரதம பிரிவு அதிபர்] அன்பு மனைவியும், திருமதி புஸ்பம் குணசிங்கம் [கனடா], திருமதி டாக்டர் சந்திரா அம்பலவாணர் [கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்], திருமதி ராணி ஸ்கொட் [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற E. T. கிச்சொக், கனம் L. N. கிச்சொக், திருமதி நேசம் கதிர்காமர், திருமதி ரேஸ் துரைரத்தினம், திருமதி நல்லம்மா இராஜரத்தினம், திருமதி அருளம்மா தம்பிராஜா [நவஜீவனம்] திரு. A. H. அரியரத்தினம் [நவஜீவனம்] ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற V. குணசிங்கம், அதி வண. D. J. அம்பலவாணர் [பேராயர் தென் இந்திய திருச்சபை,யாழ். ஆதீனம்], திரு. R. R. Scott [இளைப்பாறிய S. P.] ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வட்டுக்கோட்டை பிஷப் இல்லத்தில் இன்று சனிக்கிழமை [18-5-91] பி. ப. 3 மணிக்கு நடைபெற்று, பின் சாவகச்சேரி திருச்சபை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
டாக்டர் சந்திரா அம்பலவாணர்
[மகள்]

பிஷப் இல்லம்,
வட்டுக்கோட்டை.

[சி 4749]

### திருமதி விசாலாட்சி பூபாலசிங்கம்

மாவிட்டபுரம் இலகடியைச் சேர்ந்த விசாலாட்சி பூபாலசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி (பிரான்ஸ்), தனபாலசிங்கன் (அவுஸ்ரேலியா), பரமேஸ்வரி, சகுந்தலா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசிலாதேவி (பிரான்ஸ்), சியாமளி (அவுஸ்ரேலியா), பதஞ்சலி, விஜயகுமார் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தா, நர்மதா, கவிதா (மகாஜனக்கல்லூரி மாணவர்கள்), விதுரன் (பிரான்ஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), அபி (பிரான்ஸ் நிர்மலன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பண்டத்தரிப்பு மாதகல் வீதியிலுள்ள இளைப்பாறிய கந்தையா ஆசிரியரின் இல்லத்தில் இன்று சனிக்கிழமை (18-5-91) காலை 8 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கார்த்திகேசு பதஞ்சலி

(சி 4750)